


ontario.ca/6ways

## வல்லுநர் உயர்திறன்கள் தலையாயப் பாடம்

### இந்த செயல்திட்டம் என்ன?

வல்லுநர் உயர்திறன்கள் தலையாயப் பாடம் மாணவர்களைத் தங்கள் ஒவ்வொருவரின் தனித்திறமைகள் மற்றும் ஆர்வங்களுக்கும் ஏற்ற வேலை வாய்ப்புப் பாதையில் கவனம் செலுத்த அனுமதிக்கிறது. ஒவ்வொரு சிறப்புப் பாடமும் விருந்தோம்பல், சுற்றுலா அல்லது கட்டுமானப் பணி போன்ற ஒரு குறிப்பிட்ட துறையில் 6-லிருந்து 12 பாடத்திட்டங்கள் கொண்ட ஒரு தொகுப்பாகும்.

குறிப்பிட்ட தலையாயப் பாடத்தைத் தேர்வு செய்யும் மாணவர்கள், வேலைவாய்ப்பு தருவோரிடமும், தொழிற்திறன் கற்பிக்கும் மையங்களிலும், அத்துடன் பள்ளியிலும் வேலை கற்றுக் கொள்கிறார்கள். முதல் உதவி மற்றும் கணினி தொழில்நுட்ப திறன்களை உள்ளடக்கிய மதிப்புமிக்க தொழில் சான்றுகளையும் அவர்கள் சம்பாதிக்க முடியும்.

தலையாயப் பாடத்தை நிறைவு செய்யும் மாணவர்கள்  பணி அமர்த்துவோர் மற்றும் மேல்நிலைப்படிப்புக்குப்பின் போக்கக்கூடிய கல்வி மற்றும் பயிற்சி நிலையங்கள் விரும்பும் புலமை, திறன்கள்,தொழிற்சாலை அங்கீகரிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தும் கொண்டு தயாராக தங்கள் உயர்நிலைப் பள்ளியை விட்டு வெளிவருகிறோம் என நம்பிக்கை அடையலாம்

### இது சம்பந்தப்பட்ட சமீபத்திய நிகழ்வுகள் என்ன?

இந்த இலையுதிர் பருவத்தில் 27 பள்ளி வாரியங்கள் இவ்வகை வழிநடத்தும் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. அளிக்கப்படும் சிறப்புப்பாடங்கள் கட்டுமானப் பணி, விருந்தோம்பல்

மற்றும் சுற்றுலா, தயாரிப்புப்பணி, ஆரம்பநிலை தொழில்கள் மற்றும் கலை மற்றும் கலாச்சாரம் ஆகும்.

செப்டம்பர் 2007-க்கு ஒரு மேலும் அகலமான விரிவுபடுத்தல் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த செயல்திட்டங்களைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால், தயவுசெய்து உங்கள் பள்ளி முதல்வர் அல்லது உங்கள் குழந்தையின் மாணவர் வெற்றிக் குழும உறுப்பினரை தொடர்பு கொள்ளவும்.
உங்கள் குழந்தையின் பள்ளியை தொடர்புக் கொள்ள தகவல் பெற தயவுசெய்து பார்வையிடுங்கள்: http://www.edu.gov.on.ca/eng/sbinfo/

© Queen's Printer for Ontario, 2006